### மாதவரம், மணலி மற்றும் திருவொற்றியூர் மண்டலங்களில் மொத்தம்

# ரூ. 39.78 கோடி மதிப்பீட்டில் 5 வளர்ச்சித் திட்டங்கள்!

## அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்!





சென்னை, ஜன.15-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள், மாதவரம் மண்டலம், வார்டு-27க்குட்பட்ட மாதவரம் ஏரியில் அம்ரூத் 2.0 மற்றும் மூலதன நிதியின் கீழ் ரூ.15.03 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மாதவரம் ஏரி படகு குழாமினை நேற்று முன்தினம் (13.01.2026) பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்து, படகு சவாரியினை மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் கே.என்.நேரு அவர்கள், மணலி மண்டலம், வார்டு-20க்குட்பட்ட மணலி ஏரியில் அம்ரூத் 2.0 மற்றும் மூலதன நிதியின் கீழ் ரூ.10.41 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மணலி ஏரி படகு குழாமினைப் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

பின்னர், வார்டு-21க்குட்பட்ட மணலி பாடசாலை தெருவில் மூலதன நிதியில் ரூ.4.75 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

தொடர்ச்சியாக, வார்டு-15க்குட்பட்ட மணலி புதுநகர் 80 அடி சாலையில் மூலதன நிதியில் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

பின்னர், திருவொற்றியூர் மண்டலம், வார்டு-7க்குட்பட்ட சாத்தாங்காடு கிராமத்தில் ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

ஆக மொத்தம் மாதவரம், மணலி மற்றும் திருவொற்றியூர் மண்டலங்களில் ரூபாய் 39.78 கோடி மதிப்பீட்டில் 5 வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் மேயர் திருமதி ஆர்.பிரியா, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம் (மாதவரம்), கே.பி. சங்கர் (திருவொற்றியூர்), துரை சந்திரசேகர் (பொன்னேரி) மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர்தா.கிறிஸ்துராஜ் அவர்கள், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ண மூர்த்தி, (பணிகள்), கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டாரம்), சென்னைக் குடிநீர் வாரிய செயல் இயக்குநர் கௌரவ் குமார், மண்டலக்குழுத் தலைவர்கள் எஸ்.நந்தகோபால் (மாதவரம்), ஏ.வி.ஆறுமுகம் (மணலி), தி.மு.தனியரசு (திருவொற்றியூர்), மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மாதவரம் ஏரி படகு குழாம்**

மாதவரம் மண்டலத்தில் நீர்நிலை பகுதியான மாதவரம் ஏரி 2,67,540 சதுர மீட்டர் பரப்பளவுடன், 2,350 மீட்டர் சுற்றளவுடன், 4,57,488 கனமீட்டர் நீர் கொள்ளளவு கொண்டதாக இருந்தது. தற்போது மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணிகளின் காரணமாக நீரின் கொள்ளளவு 5,77,879 கனமீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், ஏரியினை மேம்படுத்தும் வகையில் கிழக்குப் பகுதியில் செடி, கொடிகள் அகற்றுதல், பக்கவாட்டுச் சுவர், நடைபாதை, புல்தரை நடைபாதை, குடிநீர் வசதி, பசுமைப் பரப்பிற்காக மரம், செடி நடுதல், நுழைவு வாயில், கழிப்பறை, உணவு வழங்கும் அறை, முதலுதவி மையம், காத்திருப்பு கொட்டகை, தடுப்புச்சுவர், வாகன நிறுத்த வசதி, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், மின்வசதி உள்ளிட்ட வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் இரண்டு இருக்கைகள் கொண்ட 5 மிதி படகுகள், நான்கு இருக்கைகள் கொண்ட 5 FRP மிதி படகுகள், எட்டு இருக்கைகள் கொண்ட 5 மோட்டார் இயந்திர படகுகள் மற்றும் 2 ஜெட்ஸ்கி (JETSKI) ஸ்கூட்டர்கள் மற்றும் ஒரு HDPE படகு ஆகிய 18 புதிய படகுகள் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு உள்ளது.

**மணலி ஏரி படகு குழாம்**

மணலி மண்டலம், வார்டு-20க்குட்பட்ட மணலி ஏரியில் அம்ரூத் 2.0 மற்றும் மூலதன நிதியின் கீழ் ரூ.10.41 கோடி மதிப்பீட்டில் படகு குழாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏரி 29 ஏக்கர் பரப்பளவில் 1,787 மீ. சுற்றளவில் அமைந்துள்ளது. தற்போது 1.2 மில்லியன் கனஅடி கொள்ளளவு நீர்த்தேக்கம் உடையதாக உள்ளது. இந்த ஏரியில் கரைகளைப் பலப்படுத்துதல், ஆழப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல், தூர்வாருதல், சுற்றுச்சுவர், ஏரிக்கு நீர்வரத்துக் கால்வாய்கள், வாகன நிறுத்த வசதி, இருக்கைகள், பசுமைப் பரப்பு, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை, கைப்பிடிகள், மின்வசதி உள்ளிட்ட வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ரூ.1.02 கோடி மதிப்பீட்டில் இரண்டு இருக்கைகள் கொண்ட 5 மிதி படகுகள், நான்கு இருக்கைகள் கொண்ட 4 FRP மிதி படகுகள், எட்டு இருக்கைகள் கொண்ட 4 மோட்டார் இயந்திர படகுகள், 2 ஜெட்ஸ்கி (JETSKI) ஸ்கூட்டர்கள் ஆகிய 15 புதிய படகுகள் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு உள்ளது.

**மணலி பாடசாலை தெருவில் புதிய பேருந்து நிலையம் அடிக்கல் நாட்டு விழா**

மணலி மண்டலம், வார்டு-21க்குட்பட்ட மணலி பாடசாலை தெருவில் மூலதன நிதியில் ரூ.4.75 கோடி மதிப்பீட்டில் புதிதாக பேருந்து நிலையம் கட்டப்படவுள்ளது. 2,510 சதுர மீட்டர் பரப்பளவிலான இடத்தில் 690 சதுர மீட்டர் பரப்பளவிற்கு தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களுடன் இந்த பேருந்து முனையம் கட்டப்படவுள்ளது. இதில் தரைத்தளத்தில் தாய்மார்கள் பாலூட்டும் அறை, காவல் துறையினர் அறை, ஓட்டுநர் மற்றும் நடத்துநர் அறை, பேருந்து நிறுத்தும் இடம், 48 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகன நிறுத்த இடம், பொதுக்கழிப்பிடம், முதல்தளத்தில் காத்திருப்பு அறை, 3 எண்ணிக்கையில் கடைகள் மற்றும் கழிப்பிடம், இரண்டாம் தளத்தில் 6 எண்ணிக்கையில் கடைகள் ஆகியவை கட்டப்படவுள்ளது.

**மணலி புதுநகரில் புதிய சமுதாயக் கூடம் அடிக்கல் நாட்டு விழா**

மணலி மண்டலம், வார்டு-15க்குட்பட்ட மணலி புதுநகர் 80 அடி சாலையில் மூலதன நிதியில் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் கட்டப்படவுள்ளது. இந்த சமுதாயக் கூடம் 630 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களுடன் அமைக்கப்படவுள்ளது. தரைத்தளத்தில் வாகன நிறுத்த வசதி, கழிப்பிடம், முதல் தளத்தில் உணவு உண்ணும் அறை, இரண்டாம் தளத்தில் கூட்டம் நடைபெறும் இடம், விழா மேடை, மணமகன் அறை, மணமகள் அறை ஆகியவை கட்டப்படவுள்ளது.

**சாத்தாங்காடு நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையம் திறப்பு விழா**

திருவொற்றியூர் மண்டலம், வார்டு-7க்குட்பட்ட சாத்தாங்காடு கிராமத்தில் ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் திருவொற்றியூர் பகுதியில் உள்ள தெரு நாய்கள் வாகனம் மூலம் கொண்டு வரப்பட்டு, உணவு வழங்கப்பட்டு, முதலுதவி வழங்கி, இனக்கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை மற்றும் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தப்பட்டு, மைக்ரோ சிப் பொருத்தப்பட்டு 5 முதல் 6 நாட்கள் தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டு, திரும்ப பிடித்த இடத்தில் விடப்படும்.

### ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# திரு.வி.க நகர் தொகுதியில் பொங்கல் விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பரிசுகள் வழங்கினார்!

சென்னை, ஜன.15-


சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதி வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை கொண்டாடும் வகையில் (12.01.2026) திங்கட்கிழமை மாலை 4 மணி அளவில் வார்டு 72, புளியந்தோப்பு, டிகாஸ்டர் சாலையில் அமைந்துள்ள டான் போஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரியில் பொங்கல் விழா மற்றும் கழக உறுப்பினர்களுக்கு வேட்டி, சட்டை, புடவை மற்றும் கரும்பு அடங்கிய பொங்கல் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட வடக்கு மட்டும் தெற்கு பகுதியில் 71,71(அ), 72,72(அ), 73,73(அ), 74,74(அ), 75,75(அ), 76,76(அ) ஆகிய அனைத்து வட்டங்களிலும் உள்ள பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து பாக முகவர்கள் ஆகியோருக்கு பொங்கல் பரிசினை கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி ஏற்பாட்டில் அமைச்சர் பி.கே சேகர்பாபு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகர மேயர் பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி, வடக்கு பகுதி செயலாளர் செ. தமிழ் வேந்தன், தெற்கு பகுதி செயலாளர் எம்.சாமிக் கண்ணு, 6வது மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ்குமார், தொகுதி தேர்தல் பார்வையாளர் தண்டலம் கிருஷ்ண மூர்த்தி மற்றும் இசட். ஆசாத், புனித வதிஎத்திராசன், வானவில்விஜய், ந. துலுக்காணம், பி. உதயசங்கர், பி.ஜெ .துளசிங்கம், எம். பெரோஸ்கான், பெரம்பூர் ஆர்.மகேஷ், கா.ராஜ்முகமது, இரா.வீரமணி, மாமன்ற உறுப்பினர்கள் மு.சரவணன், ச.அம்பேத்வளவன், ரமணிலோகேஷ், தமிழ் செல்வி சசிகுமார்,

திரு.வி.க நகர் வடக்கு மற்றும் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள்: அ. கோவிந்தன், த.கருணாநிதி, பி.சுகுமார், வனஜாசண்முகம், அ.கருணாநிதி, தில்லை கதிரவன், புல்லட் கி. ரமேஷ், அ.புவனவதி, கினார் ஆறுமுகம் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் எம்.தமீம், பொல்லு டி.சுரேஷ் குமார், வி. கே.வெங்கடேசன், பா.பி. தாஸ், சசிகுமார், எஸ். வெங்கடேசன், பரிமளா சுரேஷ், மா.ருத்ரமூர்த்தி, டீக்கா, அபோய், ஜி. கிருஷ்ணகுமார், எஸ். புஷ்பராஜ் மற்றும் மாவட்ட அணிகளின் இணை துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், தொகுதி மற்றம் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, வர்த்தக அணி, ஆதிதிராவிடர் நலகுழு, வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொகுதியில் அனைத்து பாகமுகவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொங்கல் பரிசு மற்றும் இனிப்புகளை பெற்றுகொண்டனர்.

## மீண்டும் தளபதிதான்!



ஆழி அலைகள்
படையெடுக்கட்டுமே
ஆயிரம் எரிமலைகள்
குழம்பெறியட்டுமே
திராவிட வானத்தைத்
தீண்ட முடியுமா?
நாம் வானம்!

★

ஓநாய்கள் புதருக்குள்
ஒன்றுபடட்டுமே
நரித்தந்திரங்கள்
நாட்டாண்மை செய்யட்டுமே

வேட்டையாடும் சிங்கம்
வெளியேறிவிட்டால்
காட்டு மிருகங்களின்
சேட்டை என்னாகும்?

★

யாரும் அணி சேரட்டுமே
யாரும் அணி மாறட்டுமே

கொள்கையோடும்
சாதனையோடும்
கூட்டணி சேர்ந்திருக்கும்
திராவிடப் படையை
நெருங்க முடியுமா?

மீண்டும் நாம்தான்
மீண்டும் தளபதிதான்

பெரியாரின் தீவிரத்தை
அண்ணாவின் அணுகுமுறையை
கலைஞரின் செயலாண்மையை
ஒற்றை உடலில்
வாங்கி வைத்திருக்கும்
தளபதியே
வெற்றிக் கனி பறிப்பார்!

★

வியாழக் கிழமைக்குப் பிறகு
வெள்ளிக் கிழமை
நிச்சயம்

25க்குப் பிறகு 26
சத்தியம்

அடுத்த முறையும்
ஆட்சி நமக்குத்தான்
லட்சியம்!

★


மழைக்காலமோ
பனிக்காலமோ
புயற்காலமோ
வெயிற்காலமோ
கிழக்கில் உதித்துக்
கொண்டேயிருப்பது
ஒரே சூரியன்தான்
உதய சூரியன்தான்!



**கவிப்பேரரசு**
**வைரமுத்து**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம. சங்கரலிங்கம்
### சனவரி 15 (2016)



**தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பகுத்தறிவுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அவர்கள் அடியொற்றி ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றியவர்.**

**1964 முதல் 1984 வரையிலான இருபது ஆண்டுகள் தொடர்ந்து தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – நான்கு ஆண்டுகள் மேலவை எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**1998 முதல் 2004 வரை இந்திய பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக இருந்தவர்.**

**அண்ணா அவர்கள்மீது கொண்ட பற்றின் காரணமாக 'அறிஞர் அண்ணா கல்லூரி' ஒன்றினை நிறுவி, அதன் முதல்வராக இருந்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திருநெல்வேலி கிழக்கு மாவட்ட

# பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கடந்த 26.9.2025 அன்று கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் திருநெல்வேலி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக ம.கிரகாம்பெல் அவர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்டக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, பின்வரும் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :

1.வெ.நம்பி,
11, யாதவர் நடுத்தெரு, வள்ளியூர், இராதாபுரம்,
திருநெல்வேலி-117.

2.எம்.எஸ்.எஸ்.ஜார்ஜ்கோசல்,
27, கீழத்தெரு, மாவடிமலையடிப்புதூர், மாவடி,
நாங்குநேரி, திருநெல்வேலி - 627 107.

3.திருமதி வே.அனுராதா,
246, விஜயதுர்காபுரி, கே.டி.சி.நகர் வடக்கு,
பாளையங்கோட்டை.

4. திருமதி ஆர். சந்திரகலா,
133/2, மாரியம்மன் கோவில் தெரு,
திருவேங்கடநாதபுரம்,
நாங்குநேரி தாலுக்கா, ஏர்வாடி-627 103.

5. ஹரிகிருஷ்ணன்,
114/827ஏ, மாணிக்கவாசகர் தெரு, பி.ஏ.பிள்ளை நகர், தியாகராஜ நகர், பாளையங்கோட்டை,
திருநெல்வேலி.

6. இ.முத்துராமலிங்கம்,
கீழபள்ளிவாசல் தெரு, திசையன்விளை,
திருநெல்வேலி

7. ஆதி நாராயணன்,
தேவர் கீழத் தெரு, வள்ளியூர் - 627 117.
திருநெல்வேலி.

8. இ. அல்போன்ஸ்
3/53, மேற்குத் தெரு, உவரி, இராதாபுரம்-627651.
திருநெல்வேலி.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.
நாள் : 14.1.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.